1982 மார்ச் 12]

(ஆ) பம்மல் தோல் பதனீடும் தொழிற்சாலை கழிவுநீரால் குடிதண்ணீர் கெடுவது.

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தாம்பரம் தொகுதி பம்மல் பேரூராட்சியில் தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் குடி தண்ணீர் கெடுவது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத்தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.—

அறிக்கை.

பம்மல் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு பேரூராட்சி யாகும். அதன் தினசரித் தேவைக்கான குடிநீர் தோண்டப்பட்ட கிணறுகள் மூலம் பெறப்படுகிறது. அவற்றுள் இரண்டு கிணறு களில் நீர் இறைப்பான்கள் பொருத்தப்பட்டு, தண்ணீர் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு ஏற்றப்பட்டு, பொதுக்குழாய் கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. மேற்கண்ட கிணறுகள் கோடைக்காலத்தில் வறண்டுவிடுகின்றன. அந்த கிணறுகளி லிருந்து கிடைக்கும் தண்ணீர் தன்மையும், அளவும் குடிக்கும் வகையிலும், போதுமானதாகவும் இல்லை.

மேற்கண்ட காரணங்களால் பம்மலுக்கு அவசர குடிநீர் திட்டம் தேவையென அறியப்பட்டு பம்மல் ஒரு வழியிடை நகரமாக ஆலந்தூர் பல்லாவரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப் பம்மல் குடிநீர் திட்டத்திற்கு ரூ. 12.12 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பெரும்பாலான தேவைகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளன. ஆலந்தூர் பல்லாவரம் கூட்டுக் குடிநீர் புதுப்பிக்கும் திட்டம் முடிவுற்றவுடன் இந்த பம்மல் குடிநீர்த் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்படும்.

தற்சமயம் இந்த பேரூராட்சியின் உடனடி குடிநீர் பிரச்னை யைப் போக்க பல்லாவரத்திற்கான அவசர குடிநீர்த் திட்டத் திலிருந்து மூன்று ஒற்றைப் பொதுக் குழாய்கள் மூலம் பம்மலுக் குத் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1982 மார்ச் 12

தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப் படும் கழிவுநீர் குடிநீருடன் கலக்காதவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டியது அத்தொழிற்சாலைகளின் பிரத்தியேகமான கடமையாகும். வடிகால் சுத்திகரிப்பு முறைகளை அமைப்பதற்காக தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு 31—12—1981 வரை காலம் கொடுக்கப்பட்டு அதற்குப் பின்னும் வடிகால் சுத்திகரிப்பு முறைகளை அமைக்கத் தவறியவர்களுக்குப் பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனுமதியை ரத்து செய்யப்படும் என்று எச்சரிக்கப்பட்டனர். இருப்பினும் தோல் பதனிடும் தொழிற்சாலையினர் மேலும் காலம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் அவர்களுக்கு 30—6—1982 வரை காலத்தை நீடித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் காலம் நீடித்துக் கொடுக்கப்பட மாட்டாது என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

திரு. பம்மல் நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் பம்மல் பேரூராட்சியில் 100 ஆண்டு காலமாக பச்சைத் தோலை சுத்தப்படுத்தியும், பதப்படுத்திய தோலுக்கு கலர் ஏற்றுவதிலும் ஏறத்தாழ 60 தொழிற்சாலைகள் ஈடுபட்டுவருகின்றன. அந்தத் தொழிற்சாலைகளின் மூலமாக வருகின்ற கழிவு நீர் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள குடிநீர் பாதிக்கப்படுவது தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த விவர அறிக்கையில் அந்த தொழிற்சாலையை நடத்துகின்றவர்கள் சுத்தப்படுத்தி அந்த நீரை வெளியே அனுப்பவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழிற்சாலையை நடத்துகின்றவர்கள் நீண்டகாலமாக அரசாங்கத்திடம் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதைக் காலதாமதம் செய்து கொண்டு வருகின்றார்கள். போன ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் அவர்களுக்கு அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. இந்த அறிக்கையில் இந்த வருஷம் 6-ஆவது மாதம் வரையில் அந்த அனுமதி நீட்டிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, மேலும் இத்தகைய நிலைமைகள் நீடிக்காமல் அவர்கள் அந்தக் கழிவு நீரை சுத்தப்படுத்தி அனுப்பாவிட்டால் அந்தத் தொழிற்சாலை நடத்துவதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் உரிமத்தை ரத்துசெய்ய அரசுமுன்வருமா ? அல்லது ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த காரியம் மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து 16 இலட்சம் ரூபாயிலே ஒரு திட்டத்தைத் தயாரித்து அரசுக்கு அனுப்பியிருக்கிறாரே, அதில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 12]

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, குடிநீரைப் பொறுத்தவரையில் அங்கே கிணற்றிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அது அன்னியில் ஆலந்தூர் பல்லாவரம் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படும்போது இந்த பம்மல் குடிநீர் திட்டமும் செயல்படும். இடையிலே 3 பொதுக் குழாய்கள் மூலம் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அந்தத் தொழிற்சாலை கழிவுநீர் நேராக குடிதண்ணீரில் கலந்துவிடுகிறது என்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்காது என்று கருதுகிறேன். 30—6—82 வரை வடிகால் சுத்திகரிப்பு முறையை அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்குமேல் காலத்தை நீட்டித்துக் கொடுக்க மாட்டோம் 'நோஃபர்தர் எக்ஸ்டன்ஷன் ஆஃப் டைம்' என்றும் சொல்லியிருக்கிறோம். உடனே தொழிற்சாலையை மூடுவது என்பது நடக்கக்கூடியது அல்ல. ஏனென்றால் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும். ஆனால் அவர்களை செய்ய வைக்க எந்த அளவுக்கு நிர்ப்பந்தம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு நிர்ப்பந்தம் செய்து, அதைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பம்மல் நல்லதம்பி : தலைவரவர்களே, குடியிருப்புப் பகுதிகளிலே இன்றும் அந்தக் கழிவுநீர் சென்று கொண்டிருப்பதால் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு திட்டத்தை அரசுக்கு அனுப்பினார். அந்தப் பகுதியிலுள்ள தண்ணீரை 'கிங் இன்ஸ்டிட்யூட்' பரிசோதனைசெய்து பார்த்ததில் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் மூடப்பட்ட கால்வாய் மூலமாக அந்தக் கழிவுநீரை அப்புறப் படுத்த அரசு ஒரு திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த முயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. ஆனாலும் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் குடிநீருடன் கலக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அந்தத் தொழில் அதிபர்களின் கடமை. எனவே, அதைச் செய்வதற்கு அவர்களை வற்புறுத்த வேண்டும், அதைச் செய்யலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை.